1993 ஏப்ரல் 29]

532—

வால்பாறை தேயிலைத் தோட்டத்தில் பணிபுரியும் நிரந்தர தற்காலிக தொழிலாளர்கள்,

*9700—டாக்டர் அ. ஸ்ரீதரன் :

மாண்புமிகு தொழிலாளர் நல துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை குன்றுகள் வால்பாறை தேயிலைத் தோட்டத்தில் நிரந்தர தொழிலாளர்கள், தற்காலிக தொழிலாளர்கள் எவ்வளவு பேர் உள்ளனர்?

(ஆ) ஒவ்வொரு ஆண்டும் எத்தனை தற்காலிக தொழிலாளர்கள் பணியில் நிரந்தரம் செய்யப்பட்டு வருகின்றார்கள்?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) வால்பாறையில் தேயிலைத் தோட்டத்தில் பணி புரியும் நிரந்தர மற்றும் தற்காலிகத் தொழிலாளர்கள் எண்ணிக்கை விவரம் :—

	ஆண்கள்.	பெண்கள்.	மொத்தம்.
நிரந்தரத் தொழிலாளர்களின் எண்ணிக்கை.	8,839	16,976	25,815
தற்காலிகத் தொழிலாளர்களின் எண்ணிக்கை.	4,835	4,477	9,312

(ஆ) வால்பாறையைப் பொறுத்தமட்டில் கடந்த மூன்று ஆண்டுகளில் தேயிலைத் தோட்டங்களில் தற்காலிகத் தொழிலாளர்கள் நிரந்தரம் செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை பின்வருமாறு :—

1989—414

1990—1.398

1991—1,044

முற்பகல் 10–50

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பிளான்டேஷன் லேபர் சட்டம், செக்ஷன் 19 மற்றும் 69-ன்படி ஒரு வாரத்தில் ஒரு நிரந்தரத் தொழிலாளி 48 மணி நேரம்,பணியாற்ற வேண்டும். வேலைப் பளு அதிகமாக இருந்தால் அதற்கு மேலே வேலை செய்கிற

ஒவ்வொரு மணிக்கும் இரட்டிப்பு ஊதியம் கொடுத்து, ஒரு வாரத்தில் மேற்படியாக 57 மணிநேரம் வேலை செய்ய வேண்டும் என்கிற ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டால். லேண்ட்-லேபர் ரேஷியா பிரகாரம் ஒரு ஏக்கருக்கு ஒன்றரை ஆட்களை நிரந்தரம் செய்யவேண்டுமென்று சட்டம் இருக்கின்ற காரணத்தால், நம்முடைய அரசு, அதை வலியுறுத்தி அப்பேற்பட்ட அந்த தேயிலைத் தோட்ட நிறுவனங்கள் அந்தச் சட்டத்தின்படியாக பணி நிரந்தரம் செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வற்புறுத்துமா என அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சட்டப்படிதான் ஒவ்வொரு தேயிலைத் தோட்டத்திலும் தொழிலாளர்கள் நிரந்தரம் செய்யப்படுவதற்கான வழிவகைகளை இன்றைக்கு ஏற்பாடு செய்யப்பட்டு ஆண்டுதோறும் அங்கே அவர்களுடைய தேவைக்கேற்ப தற்காலிகப் பணியாளர்கள் நிரந்தரம் ஆக்கப்பட்டு வருகிறார்கள்,

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிகவும் நல்ல முறையில் சிறப்பாகப் பணியாற்றுகிறார்கள் என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இந்த மாமன்றத்தின் மூலமாக தெரியப்படுத்துவது என்னவென்றால், அங்கே பல்வேறு எஸ்டேட்டுகளுக்கு மக்களின் குறைகளைக் கேட்கச் செல்லுகிறபோது, அவர்களை நேரடியாகப் பார்க்கிறபோது, பல்வேறு இடங்களில் நிறைய தொழிலாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்படவேண்டிய ஒரு கட்டாயத்தில் இருக்கிறார்கள். ஒரு எஸ்டேட்டில் 8 வருடம், 10 வருடம், ஏன் 23 வருடங்களாக அங்கே பணி நிரந்தரம் செய்யப்படாமல் பல தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அந்த எஸ்டேட்டின் பெயர் கல்யாணப்பந்தல். அந்தத் தொழிலாளர் பெயர் கல்யாணசுந்தரம். அவரும் அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வுடைய கிளைச் செயலாளர் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உயர் அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு இதை ஆராய்ந்து மறுபரிசீலனை செய்து நல்ல முடிவை அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவது உரிய வகையில் பரிசீலிக்கப்படும் என்பதையும், லேபர் அட்வைசரி போர்டில் தேயிலைத் தோட்ட தொழிற் சங்கப் பிரதிநிதிகளும் அங்கே உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அங்கே இதுபோன்ற கோரிக்கைகளை அவர்கள் எழுப்புகிற நேரத்தில் அங்கேயே அதற்குரிய வழிவகைகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1993 ஏப்ரல் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 533. திரு. ஏ. டி. செல்லசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

533—

ஒட்டன்சத்திரம் பகுதியில் தக்காளிப் பழரசம் தயாரிக்கும் தொழிற்சாலை.

* 9857—திரு. ஏ. டி. செல்லசாமி :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் பகுதியில் தக்காளி விளைச்சல் அதிகமாக உள்ளதால் இங்கு தக்காளி பதப்படுத்தவும், தக்காளிப் பழரசம் தயாரிக்கவும் தொழிற்சாலை ஏற்படுத்தி வெளி மாநிலங்களுக்கும், வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ஏ. டி. செல்லசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே ஒட்டன்சத்திரம் மார்க்கெட் தான் காய்கறி விற்பனையில் முதலிடத்தை வகிக்கிறது. அங்கேயிருந்து பச்சைக் காய்கறிகள், பழங்கள் போன்றவை தினமும் சென்னைக்கும், கேரளா, பெங்களூர் போன்ற பிற மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகின்றன. தக்காளி போன்ற விரைவில் அழுகக்கூடிய காய்கறிகள் திடீரென்று மார்க்கெட் விலை இறக்கம் போன்றவைகளால், அல்லது வேலை நிறுத்தம், பந்த் போன்றவைகளால் பிரச்சினை ஏற்படும்போது, தக்காளிப் பழத்தைப் பாதுகாக்க முடியாமல் அதை தெருவிலே கொட்டிவிட்டு விவசாயிகள் அல்லல்படும் சூழ்நிலை பல்வேறு சமயங்களில் தொடர்ந்து ஏற்படுகிறது. எனவே விவசாயிகளின் மீது அக்கறைகொண்டு பல்வேறு சலுகைகளை அளித்துவருகிற புரட்சித் தலைவி அவர்களின் அரசு விவசாயிகளுடைய இந்த நீண்டகால பிரச்சினையை தீர்க்கும் வகையில் தக்காளி பதப்படுத்தும் மற்றும் பழரசம் தயாரிக்கும் நிலையத்தை அங்கே விரைவில் ஏற்படுத்த [illegible] என்பதை அறிய விரும்புகிறேன்.